# உயர் கல்வித் துறை

மானியக் கோரிக்கை எண் : 20

## அறிவிப்புகள்
## 2020 - 2021


**கே.பி. அன்பழகன்**

உயர் கல்வித் துறை அமைச்சர்

## 1. 23 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 100 MBPS அளவிலான தொடர் இணையதள வசதி ஏற்படுத்துதல்

## (PROVISION OF LEASED LINE INTERNET FACILITY WITH 100 MBPS IN 23 GOVERNMENT POLYTECHNIC COLLEGES)

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டும், மாணாக்கர்கள் அரசால் வழங்கப்பட்டுள்ள விலையில்லா மடிக்கணினிகளை நன்முறையில் பயன்படுத்தவும் 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 28 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு இணையதள வசதி ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள 23 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 100 MBPS அளவிலான தொடர் இணையதள வசதி ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

## 2. வேலூர், தந்தை பெரியார் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் அமைப்பியல் துறையில் முதுநிலை பட்டப்படிப்பு (கட்டுமான பொறியியல்) துவங்குதல்

**(Starting of Post Graduate course (Structural Engineering) in the Department of Civil Engineering, in Thanthai Periyar Government Institute of Technology, Vellore)**

வேலூர், தந்தை பெரியார் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் 5 இளங்கலை பாடப்பிரிவுகளும், 3 முதுநிலை பாடப்பிரிவுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. அமைப்பியல் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படுவதால், கட்டுமான பொறியியல் (Structural Engineering) என்ற முதுநிலை பட்டப்படிப்பு துவங்கப்படும். இப்பாடப்பிரிவிற்காக 5 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவும், உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தவும், கணினி உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கும் தொடரும் மற்றும் தொடரா செலவினமாக ரூ.3.13 கோடி வழங்கப்படும்.

### 3. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு மதுரை மண்டல இணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்துதல்

### (Establishment of Office of Regional Joint Director at Madurai for Directorate of Technical Education)

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் பணியினை செம்மைப்படுத்த ரூ.1.14 கோடி செலவில் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு ஒரு மண்டல இணை இயக்குநர் அலுவலகம் மதுரையில் ஏற்படுத்தப்படும்.

**4. தொன்மை வாய்ந்த உதகமண்டலம், அரசுக் கலைக் கல்லூரிக் கட்டடங்களை புனரமைத்து பாதுகாத்தல்.**

**(Conservation and Restoration of Heritage Buildings in the Government Arts College at Uthagamandalam)**

உதகமண்டலம், அரசுக் கலைக் கல்லூரியின் பாரம்பரியமிக்க கட்டடங்களை அதன் தொன்மை மாறாமல் மீட்டமைக்க வேண்டியதன் அவசியத்தினை கருதி ரூ. 8.20 கோடியினை ஒதுக்கீடு செய்து இப்புராதனக் கட்டடங்கள் புனரமைத்துப் பொலிவு பெறச் செய்யப்படும்.

## 5. தொன்மை வாய்ந்த புதுக்கோட்டை, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி கட்டடங்களை புனரமைத்து பாதுகாத்தல்

**(Conservation and Restoration of Heritage Buildings in the H.H. The Rajah's College, Pudukottai)**

புதுக்கோட்டை, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரியின் பாரம்பரியமிக்க கட்டடங்களை அதன் தொன்மை மாறாமல் மீட்டமைக்க வேண்டியதன் அவசியத்தினை கருதி ரூ.2.40 கோடியினை ஒதுக்கீடு செய்து இப்புராதனக் கட்டடங்கள் புனரமைத்துப் பொலிவு பெறச் செய்யப்படும்.

## 6. கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் மின் ஆளுமைத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் செயல்படுத்துதல்

## (Implementation of e-Governence – Phase II in the Directorate of Collegiate Education)

தமிழ்நாடு மின் ஆளுமைத் திட்ட முகமை, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் 2019–2020 ஆம் நிதியாண்டில் மின் ஆளுமைத் திட்டத்தை செயல்படுத்த முதற்கட்டமாக ரூ.99.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் முழுமையாக செயல்படுத்த இரண்டாம் கட்டமாக ரூ. 2.65 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 7. கல்லூரி வளாகங்களில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல்

## (Installation of CCTV facilities in College Campuses)

அரசு கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர், மற்றும் ஆசிரியப் பணியாளர்களின் பாதுகாப்பிற்காக அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் முதற்கட்டமாக ரூ. 2.50 கோடி செலவில் பொருத்தப்படும்.

## 8. மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு சட்ட அலுவலர் பணியிடம் தோற்றுவித்தல்

**(Creation of one Law officer Post in the office of the Joint Director, Collegiate Education, Madurai Region)**

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் கல்லூரிக் கல்வித் துறை தொடர்பான வழக்குகளை எதிர்கொள்ளவும், உச்சநீதிமன்ற வழக்குகளுக்கான ஆணை உறுதிப் பத்திரம் தயாரித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளவும், அரசு சிறப்பு வழக்குரைஞர் மற்றும் பிற சட்ட அலுவலர்களுடன் இணைந்து பணியாற்றவும் மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு அரசு சார்புச் செயலாளர் நிலையில் ஒரு சட்ட அலுவலர் பணியிடம் ரூ. 12.50 இலட்சம் செலவில் தோற்றுவிக்கப்படும்.

## 9. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல்

## (Training to the Government Arts and Science College Teachers)

தற்போது நிகழ்ந்து வரும் அறிவுப் பெருக்கத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் ஆசிரியர்கள் தங்களை தயார்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் மாணாக்கர்களுக்கு கற்பிக்க வேண்டி ரூ. 2.05 கோடி செலவில் ஆசிரியர்களுக்கான பயிற்சி தகுதியான பாட வல்லுநர்களைக் கொண்டு வழங்கப்படும்.

## 10. அரசு கலைக் கல்லூரிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.16.00 கோடி நிதி வழங்குதல்

**(Grant of Rs.16.00 crore for infrastructure development for Government Arts and Science Colleges)**

அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி, அரசினர் கலைக் கல்லூரி, தர்மபுரி, அரசினர் கலைக் கல்லூரி, சிதம்பரம், சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம், அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி, சிவகங்கை, அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி, இராமநாதபுரம், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு மற்றும் பெரியார் அரசு கலைக்கல்லூரி, கடலூர் ஆகிய 8 கல்லூரிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வாங்குவதற்கும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் தலா ரூ. 2.00 கோடி வீதம் ரூ.16.00 கோடி வழங்கப்படும்.

## 11. திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.20.00 கோடி நிதி வழங்குதல்

**(Grant of Rs.20.00 crore for upgradation of infrastructure to Thiruvalluvar University, Vellore)**

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணாக்கர்களின் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி திறனை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வக உபகரணங்கள் வாங்குவதற்கும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் ரூ. 20.00 கோடி நிதி வழங்கப்படும்..

## 12. தமிழ்நாடு ஆவணக்காப்பக ஆவணங்களை செப்பனிடுதல் மற்றும் மின்னுருவாக்கம் செய்தல்

## (Mending and Scanning of Records at Tamil Nadu Archives)

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் 1670ஆம் ஆண்டு முதல் 2014–ம் ஆண்டு வரையிலான மதிப்பு மிக்க அரசாணைகள், அரசிதழ்கள், நில ஆவணங்கள், நூலக புத்தகங்கள் ஆகிய ஆவணங்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இதில் 62 இலட்சம் பக்கங்கள் கொண்ட (10 TB தரவுகள்) மின்னுருவாக்கம் செய்யப்பட்ட ஆவணங்களை செப்பனிடவும் மேலும் மின்னுருவாக்கம் செய்யவும் ரூ. 16.00 கோடி வழங்கப்படும்.

## 13. தமிழ்நாடு ஆவணக்காப்பகம், சென்னை கட்டடம் புனரமைத்தல்

## (Restoration of existing building of Tamil Nadu Archives at Chennai)

சென்னையின் மையப் பகுதியான எழும்பூரில் அமைந்துள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பக கட்டடம் 1909இல் கட்டப்பட்டது. இதனை பாதுகாப்பதன் அவசியத்தை கருதி ரூ.9.41 கோடி செலவில் தமிழ்நாடு ஆவணக்காப்பக கட்டடம் புனரமைத்து பராமரிக்கப்படும்.

## 14. எண்ணிலக்க ஒளிப்படக்கருவி அமைப்புடன் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தை புதுப்பித்தல்

**(Modernisation of Anna Science Centre Planetarium at Tiruchirapalli with Digital Projection System)**

கோளரங்கத்தில் வான்பொருட்களின் படங்களைத் தெளிவாகக் காண்பிப்பதற்கும், வானவியல் நிகழ்வுகளின் இயங்குபடங்களை பொதுமக்களுக்கு காண்பிக்கும் வகையிலும் எண்ணிலக்க ஒளிப்படக் கருவி அமைப்புடன் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மைய கோளரங்கம் ரூ. 3.00 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

## 15. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் வழியாக தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சி பட்டறைகள் நடத்த நிதியை உயர்த்தி வழங்குதல்

## (Enhancement of grant for conducting National and International Conferences, Seminars, Workshops through Tamil Nadu State Council for Higher Education)

மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சி திறனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படும் தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சி பட்டறைகள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் நிதி ரூ.5.00 இலட்சத்தில் இருந்து ரூ. 25.00 இலட்சமாக உயர்த்தி தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்கு வழங்கப்படும்.

## 16. சென்னைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து வளாகங்களிலும் மகளிர் பாதுகாப்பு வசதி மையம் நிறுவுதல்

**(Establishment of Facilitation Centre for Women Safety in all the campuses of University of Madras)**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து வளாகங்களிலும் மகளிர் பாதுகாப்பு வசதி மையம் நிறுவப்பட்டு அதன்மூலம் பல்கலைக்கழகத்தின் 5 வளாகங்களிலும் சுமார் 150 CCTV கேமராக்கள் 24 மணி நேரமும் இயங்கும்படி ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 17. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மையப்படுத்தப்பட்ட சிறப்புக்கருவிகள் மையக் கட்டடம் கட்டுதல்

## (Construction of Building for Centralized Instrumentation Centre at Annamalai University )

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 90ஆம் ஆண்டு கல்விச் சேவையை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கொண்டாடும் இவ்வேளையில் சுமார் 4.80 கோடி ரூபாய் செலவில் 24000 சதுர அடியில் மையப்படுத்தப்பட்ட சிறப்புக்கருவிகள் மையக்கட்டடம் ஒன்று கட்டப்படும்.

## 18. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உள்ள மைய நூலகத்தை நவீனமயமாக்கல்

## (Modernization of Central Library at Annamalai University)

அண்ணாமலைப் பல்கலைக்கழக மைய நூலகத்தில் உள்ள சுமார் 1,70,000 ஆவணங்கள் மற்றும் 3,16,000 புத்தகங்களுக்கு வானலை அதிர்வெண் அடையாளம் (RFID - Radio Frequency Identification) பொருத்தப்படும். இந்த நவீன தொழில்நுட்பமானது ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 19. அழகப்பா பல்கலைக்கழகத்தில் தாவர நெகிழி பயன்பாட்டு மையத்தை நிறுவுதல்

## (Establishment of “Bio-Plastic Centre” at Alagappa University)

மக்களிடையே நெகிழி பயன்பாட்டைத் தவிர்ப்பதற்கும், தாவர நெகிழி (Bio-Plastic) பயன்பாட்டை அதிகரிப்பதற்கும், அது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் அழகப்பா பல்கலைக்கழகத்தில் தாவர நெகிழி மையம் **ரூ. 3.00 கோடி** செலவில் அமைக்கப்படும்.

## 20. அழகப்பா பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தொன்மை, பண்பாடு மற்றும் வரலாற்று மையம் நிறுவுதல்

## (Establishment of “Centre for Tamil Antiquity, Culture and History” at Alagappa University )

தமிழின் தொன்மை, பண்பாடு மற்றும் வரலாறு இவற்றின் சிறப்புகளைப் பற்றி அனைவரும் அறியும் வகையில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தொன்மை, பண்பாடு மற்றும் வரலாற்று மையம் ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 21. அழகப்பா பல்கலைக்கழகத்தில் பாக்டீரியா நோய்சார் மேலாண்மையில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கு மாற்று மூல வழியை ஆராய்வதற்கானத் திட்டம்

**(Scheme for Alternative strategy to antibiotics in bacterial disease Management at Alagappa University)**

அழகப்பா பல்கலைக்கழகத்தில் கடல் மற்றும் நன்னீர் வளங்களிலிருந்து உண்ணக்கூடிய நுண்ணுயிரினங்களைக் கண்டறிந்து, பாக்டீரியா தொற்றுநோய்களுக்கு எதிரான தயாரிப்புகளை உருவாக்குவதற்கும் அவற்றின் தொற்று எதிர்ப்புத் திறனை ஆராய்வதற்கும் ரூ. 1.00 கோடியில் திட்டம் உருவாக்கப்படும்.

## 22. பாரதியார் பல்கலைக்கழகத்தில் நூலகம் மற்றும் உயிர் அறிவியல் துறைகளுக்குப் புதிய கட்டடங்களைக் கட்டுதல்

## (Construction of New Buildings for Library and Life Science Department in Bharathiar University, Coimbatore)

பாரதியார் பல்கலைக்கழகத்தில் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய ஒரு புதிய நூலகக் கட்டடமும் ஆராய்ச்சி மாணாக்கர்கள் பயனடையும் வகையில் உயிர் அறிவியல் துறைக்கு ஒரு புதிய கட்டடமும் ரூ. 20.00 கோடி செலவில் கட்டப்படும்.

## 23. பாரதியார் பல்கலைக்கழகத்தில் மகாகவி பாரதியார் உயராய்வு மையம் மற்றும் அருங்காட்சியகம் நிறுவுதல்

## (Establishment of Mahakavi Bharathiar Advanced Research Centre and Museum at Bharathiar University)

மகாகவி பாரதியின் வாழ்வியல் சிந்தனைகளையும் படைப்பிலக்கிய மேன்மையையும் அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் உலகத் தரத்தில் “மகாகவி பாரதியார் உயராய்வு மையம்” மற்றும் அருங்காட்சியகம் ரூ. 2.50 கோடி செலவில் அமைக்கப்படும்.

## 24. பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஆண்கள் விடுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை மறு சுழற்சி செய்வதற்கான கருவியை நிறுவுதல்

## (Erection of Sewage Treatment Plant for recycling of waste water from Boys Hostels at Bharathiar University)

பாரதியார் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் விடுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை மறு சுழற்சி செய்வதற்காகக் கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்கான கருவி ரூ. 2.0 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

## 25. கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் நிறுவுதல்

**(Establishment of the Centre for Research and Technology Development (CRTD) in Bharathiar University, Coimbatore )**

பாரதியார் பல்கலைக்கழகத்தில் நிதியுதவி பெற்ற ஆராய்ச்சித் திட்டங்களை விரைவாக செயல்படுத்தவும், தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் சிறப்பு மனிதவள மேம்பாட்டிற்குத் தொழில்துறையுடன் வலுவான தொடர்புகளை வளர்ப்பதற்காகவும் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு மையம் நிறுவப்படும்.

## 26. பாரதியார் பல்கலைக்கழகத்தில் திறந்தவெளி பல்நோக்கு அரங்கு கட்டுதல்

## (Construction of Multipurpose Open Auditorium in Bharathiar University)

பாரதியார் பல்கலைக்கழகத்தில் 7200 ச.மீ பரப்பளவில் மூவாயிரம் உறுப்பினர்கள் அமரக்கூடிய ஒரு திறந்தவெளி பல்நோக்கு அரங்கம் ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 27. பாரதியார் பல்கலைக்கழகத்தில் தொழில் கூட்டிணைவு மையத்தை நிறுவுதல்

## (Establishment of University Industry Collaboration Centre at Bharathiar University)

பாரதியார் பல்கலைக்கழகத்தில் தனிச்சிறப்பு தொழில் ஆய்வக மையம், மின்தொழில் மையம், தொழில் முனைவோர் ஆலோசனை சேவை மற்றும் வெளிநாட்டில் வேலைவாய்ப்பிற்கான மையம் ஆகியவை கொண்டு ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் தொழில் கூட்டிணைவு மையம் அமைக்கப்படும்.

## 28. பாரதியார் பல்கலைக்கழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் அழிவின் விளிம்பில் உள்ள தாவர இனங்களைப் பாதுகாப்பதற்காக தாவரவியல் பூங்காவை நிறுவுதல்

**(Establishment of Botanical Garden in Bharathiar University for Conserving the endangered Plants from the Habitat destruction)**

மேற்கு தொடர்ச்சி மலைகளில் அழிவின் விளிம்பில் உள்ள தாவர இனங்களை பாதுகாக்கும் வகையில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் 40,000 சதுர மீட்டர் பரப்பளவில் தாவரவியல் பூங்கா சுமார் ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

## 29. பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப்பேரூர் வளாகத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல்

**(Construction of compound Wall at Palkalaiperur campus of Bharathidasan University )**

பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப்பேரூர் வளாகத்தின் பாதுகாப்புக் கருதி 5.75 கி.மீ. நீளத்திற்கு ரூ. 7.50 கோடி செலவில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.

## 30. பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப்பேரூர் வளாகம் மற்றும் காஜாமலை வளாகத்திலுள்ள மாணவியர் விடுதிகளை விரிவுப்படுத்துதல்

## (Extension of Girls Hostel at Palkalaiperur and Khajamalai Campus of Bharathidasan University)

பாரதிதாசன் பல்கலைக்கழக பல்கலைப்பேரூர் வளாகம், மற்றும் காஜாமலை வளாகத்திலுள்ள மாணவியர் விடுதிகள் ரூ. 5.40 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப்படும்.

## 31. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 300 கணினிகளுடன் கூடிய மொழி ஆய்வகத்தை ஏற்படுத்துதல்

**(Establishment of Language Laboratory with 300 computers in Madurai Kamaraj University)**

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மாணாக்கர்களின் அயல்மொழித் திறனை மேம்படுத்தவும் புதிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும் ரூ. 2.24 கோடி மதிப்பீட்டில் 300 கணினிகளுடன் கூடிய மொழி ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.

## 32. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் உயிர் மருத்துவ அறிவியல் புலம் உருவாக்குதல்

## (Creation of School of Bio Medical Sciences in Madurai Kamaraj University)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நோயெதிர்ப்பு, மூலக்கூறு உயிரியல், உயிர்தகவலியல், தடய அறிவியல் மற்றும் மனித மரபியல் போன்ற பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ள ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் உயிர் மருத்துவ அறிவியல் புலம் உருவாக்கப்படும்

## 33. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் மத்திய அதிநவீன ஆய்வுக் கருவிகள் மையக் கட்டடம் கட்டுதல்

## (Construction of Instrumentation Central Building at Manonmaniam Sundaranar University)

மாணவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை அங்கீகரிப்பதற்கும், பலவகையான கருத்தரங்குகளின் மூலம் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுவதற்கும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் அதி நவீன வசதிகளுடன் கூடிய ஆய்வக கருவிகள் மையம் ரூ. 3.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 34. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் புதிய மகளிர் விடுதிக்கான கட்டடம் கட்டுதல்

## (Construction of new Women's Hostel at Manonmaniam Sundaranar University)

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தற்சமயம் 5 வருட ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பு ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன் மூலம் மாணவிகளின் சேர்க்கை எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இப்பல்கலைக்கழகத்தில் ரூ. 1.32 கோடி மதிப்பீட்டில் புதிய மகளிர் விடுதிக் கட்டடம் கட்டப்படும்.

### 35. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதியில் நவீன சமையலறையுடன் கூடிய உணவருந்தும் கூடம் கட்டுதல்

### (Construction of Dining Hall with Modular Kitchen for the newly constructed Boy's Hostel at Manonmaniam Sundaranar University)

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், நவீன சமையலறையுடன் கூடிய உணவருந்தும் கூடம் ரூ. 1.30 கோடி செலவில் கட்டப்படும்.

## 36. பெரியார் பல்கலைக்கழகத்தின் தர்மபுரி முதுநிலை விரிவாக்க மையத்திற்கு கட்டடங்கள் கட்டுதல்

**(Construction of Buildings for Dharmapuri PG extension centre of Periyar University)**

தர்மபுரியில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவாக்க மையமானது அதியமான் அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு காரிமங்கலம், பூமாண்டஅள்ளியில் ரூ. 10.15 கோடி மதிப்பீட்டில் சொந்த கட்டடம் கட்டப்படும்.

## 37. பெரியார் பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறைக்கான கட்டடத்தில் கூடுதல் தளங்கள் கட்டுதல்

**(Construction of additional floors for the Department of Journalism and Mass communication in Periyar University)**

பெரியார் பல்கலைக்கழகம் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை ஒருங்கிணைந்த 5 ஆண்டு முதுகலைப் பட்டப்படிப்பை அறிமுகப் படுத்தியுள்ளது. இத்துறைக்காக கூடுதல் தளங்கள் ரூ. 5.30 கோடியில் கட்டப்படும்.

## 38. பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் 300 கிலோ வாட் திறன் கொண்ட மேற்கூரை சூரிய மின் நிலையம் நிறுவுதல்

## (Installation of 300 KW Roof top Solar power plant in Periyar University)

பெரியார் பல்கலைக்கழகம் தனது மின் பயன்பாட்டில் தன்னிறைவு பெறும் பொருட்டு, சுயநிலைத் தன்மைக்கொண்ட ஆற்றல் வளத்தை மேம்படுத்திக் கொள்ள பல்கலைக்கழக வளாகத்திலுள்ள அறிவியல் புலத்தின் கட்டடத்தில், 300 கிலோ வாட் திறன் கொண்ட மேற்கூரை சூரிய மின் நிலையம் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு ஆற்றல் மேம்பாட்டு முகமை மூலம் நிறுவப்படும்.

## 39. பெரியார் பல்கலைக்கழகத்தின் மாணாக்கர்கள் விடுதிகளில் கூடுதல் அறைகள் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் பணி மேற்கொள்ளுதல்

**(Construction of additional rooms and Renovation work for students hostel in Periyar University)**

பெரியார் பல்கலைக்கழகத்தில் உள்ள மாணாக்கர்களுக்கான விடுதிகளில் கூடுதல் அறைகளுக்கான கட்டுமான மற்றும் புதுப்பித்தல் பணிகள் ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 40. அண்ணா பல்கலைக்கழகத்தில் உணவகக் கட்டடம் மற்றும் இயந்திரவியல் துறையில் ஆய்வகக் கட்டடம் கட்டுதல்.

## (Construction of Canteen Building and Laboratory Building for Department of Mechanical Engineering at Anna University)

அண்ணா பல்கலைக்கழக மாணாக்கர்கள் மற்றும் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவ்வளாகத்தில் மூன்று அடுக்குகள் கொண்ட உணவகக் கட்டடம் ரூ. 25.00 கோடியிலும் இயந்திரவியல் துறை ஆய்வக உபகரணங்களை பாதுகாப்பாக வைப்பதற்கும், ஆராய்ச்சி நடவடிக்கை மேற்கொள்ளவும் மூன்று அடுக்குகள் கொண்ட ஆய்வகக் கட்டடம் ரூ. 12.00 கோடியிலும் கட்டப்படும்.

**41. அண்ணா பல்கலைக்கழக கோயம்புத்தூர் மண்டல வளாகத்தில் மாணாக்கர்கள் விடுதிகளில் கூடுதல் தளம் கட்டுதல்.**

**(Construction of Additional Floor in students hostel at Coimbatore Regional Centre of Anna University)**

அண்ணா பல்கலைக்கழக கோயம்புத்தூர் மண்டல வளாகத்தில் மாணவ, மாணவியரின் நலன் கருதி தற்போதுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிக் கட்டடங்களில் ரூ. **3.50** கோடி செலவில் கூடுதல் தளங்கள் கட்டப்படும்.

## 42. அரியலூர் அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரியின் மாணவர்கள் விடுதியில் கூடுதல் தளம் கட்டுதல்

**(Construction of additional floor in Boys hostel at Anna University College of Engineering, Ariyalur)**

அரியலூர் அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரியில் உள்ள மாணவர்கள் விடுதிக்கு கூடுதல் தளம் கட்டவேண்டியதன் அவசியத்தை கருதி அவ்விடுதி கட்டடத்தில் ரூ. 2.20 கோடி செலவில் கூடுதல் தளம் கட்டப்படும்.

**43. அண்ணா பல்கலைக்கழக மதுரை மண்டல வளாகத்தில் ஹைட்ராலிக்ஸ் மற்றும் பொருட்களின் வலிமை ஆய்வகத்தை கட்டுதல்.**

**(Construction of Hydraulics and Strength of Materials Laboratory at Madurai Regional Centre of Anna University)**

அண்ணா பல்கலைக்கழக மதுரை மண்டல வளாகத்தில் அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழும ஒழுங்குமுறை 2017ன் படி மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக ஹைட்ராலிக்ஸ் மற்றும் பொருட்களின் வலிமை ஆய்வகத்திற்கான கட்டடம் ரூ. 1.54 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 44. அண்ணா பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் நிர்வாகத்தில் மின் ஆளுமையினை நடைமுறைப்படுத்துதல்

## (Implementing e-Governance in the Departments and in Administration of Anna University)

அண்ணா பல்கலைக்கழகத் துறைகளில் நிர்வாகத்தை வேகப்படுத்த ரூ. 1.0 கோடி செலவில் மின் ஆளுமை அமைக்கப்படும். இதனால் பல்கலைக்கழகம் மற்றும் துறைகளின் அன்றாட நடவடிக்கைகளை விரைவு படுத்துவதோடு மட்டுமல்லாமல் இலக்கமுறை மயமாக்கல் மற்றும் தரவு பாதுகாப்பையும் செயல்படுத்த ஏதுவாக அமையும்.

**கே.பி. அன்பழகன்**
உயர் கல்வித் துறை அமைச்சர்